


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு, சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறையின் நிதி உதவியோடு, இலவுவிளை மார் எப்ரேம் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற (26.08.2016) அன்று இன்ஸ்பையர் இன்டேன்ஷிப் முகாமில் பங்கேற்பு.

செ.வெ.எண்: 577/2016 நாள்: 27.08.2016

**மத்திய அரசின் அறிவியல் மற்றம் தொழில்நுட்ப துறையின் நிதி உதவியோடு மார் எப்ரேம் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற இன்ஸ்பையர் இன்டேன்ஷிப் முகாமில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் பங்கேற்பு.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு, சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், இலவுவிளை மார் எப்ரேம் பொறியியல் கல்லூரியில் 22.08.2016 முதல் 26.08.2016 வரை மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறையின் நிதி உதவியோடு இன்ஸ்பையர் இன்டேன்ஷிப் முகாம் நடைபெற்றது. 10-ம் வகுப்பு பொதுத்தேர்வில் 480 மதிப்பெண்களுக்கு மேல் பெற்று 33 மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் 150 மாணவ, மாணவியர்கள் இம்முகாமில் பங்கேற்றனர்.

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு, சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமைத்தாங்கி தெரிவித்ததாவது:-

மாணவர்கள் தாங்கள் பயிலும் அடிப்படை கல்வியை பயன்படுத்தி, புதியதாக மக்களுக்கு பயன்படும் பொருட்களை கண்டுபிடிக்க வேண்டும். நமது மாவட்டத்தின் தலைசிறந்த மாணவர்களாகிய நீங்கள் இங்கே அமர்ந்திருக்கிறீர்கள். உங்களுடைய எண்ணங்களை நீங்கள், உங்களுக்குள் கலந்துரையாடும்பொழுது, மேலும் சிறப்பாக செயல்பட முடியும் எனவும், நீங்கள் கற்றுக்கொண்டவற்றை பயன்படுத்தி, சமூகத்தின் வளர்ச்சிக்கும், தேசத்தின் வளர்ச்சிக்கும் சிறந்த பங்களிப்பை வழங்க கேட்டுக்கொண்டார்.

சிறப்பாக நமது அறிவை பயன்படுத்தி கடினமாக உழைத்து, கற்றவற்றை நடைமுறை படுத்த வேண்டும். மேலும் எங்கெல்லாம் வாய்ப்புகள் கிடைக்கிறதோ, அங்கெல்லாம் உங்களை முழுமையாக வெளிப்படுத்தி முதன்மையானவர்களாக திகழ வேண்டும். முதன்மை கல்வி நிறுவனங்களில் உயர்கல்வி பயில, நடைபெறும் பல்வேறு போட்டி தேர்வுகள் குறித்து விழிப்பாயிருக்க வேண்டும் எனவும் அறிவுரைகளை வழங்கினார்.

இந்தியாவின் பல்வேறு முதன்மை கல்வி நிறுவனங்களிலிருந்து பேராசிரியர்கள் கலந்து கொண்டு கணிதம், இயற்பியல், வேதியல், உயிரியல் மற்றும் புவிதகவியல், நுட்பவியல் போன்ற தலைப்புகளில் பயிற்சிகள் வழங்கினார். மாணவர்களுக்கு செய்முறை பயிற்சிகளும் வழங்கப்பட்டது.

முகாமில் கல்லூரி தாளாளர் அருட்தந்தை பிரேம்குமார், முதல்வர் திரு. லெனின் பிரட், நிதி காப்பாளர் அருட்தந்தை ஏசுதாஸ், இயக்குநர் திரு. ஆஸ்டின் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர். முகாமிற்கான ஏற்பாடுகளை திரு. லியோபிரைட் சிங் தலைமையில் பேராசிரியர்கள் செய்திருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.